**சுருக்கம்**

புரட்சித்தலைவர் எம்.ஜிஆர் சத்துணவுத் திட்டம் – பணியில் இருக்கும் போது காலமான சத்துணவு அமைப்பாளர், சமையலர், சமையல் உதவியாளர், குழந்தைகள் மைய பணியாளர், குழந்தைகள் மைய உதவியாளர் ஆகியோரின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்க ஆணை வெளியிடப்பட்டது–தெளிவுரை வழங்கி ஆணையிடப்படுகிறது.

---

சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் (சஉதி2) துறை

அரசாணை (நிலை) எண்.6 நாள் : 22 – 01–09
திருவள்ளுவர் ஆண்டு 2040
தை திங்கள் 9ம் நாள்.

படிக்கப்பட்டது:

1 அரசு ஆணை (நிலை) எண். 198 ச.ந.(ம)ச.உதி(சஉதி2) துறை நாள் :25.10.07

மேலும் படிக்கப்பட்டவை:–

2 மாவட்ட ஆட்சித் தலைவர் திருவள்ளூர் அவர்களின் ந.க.எண் 39134/07/பி(எப்) 2 நாள் 08.01.09

3 சமூக நல ஆணையர் அவர்களின் ந.க.எண் 60946 /07/சஉதி –நி1 / நாள் : 04.03.08

**ஆணை:-**

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவுத்திட்டம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் ஆகிய திட்டங்களில் பணியில் இருக்கும்போது காலமான பணியாளர்களின் பெண் வாரிசு தாரர்களுக்கு சத்துணவு திட்டங்களில் சத்துணவு அமைப்பாளர், சமையலர், சமையல் உதவியாளர், குழந்தைகள் மைய பணியாளர், குழந்தைகள் மைய உதவியாளர்களாக கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்ய அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு அனுமதி வழங்கி மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டது.

2. கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கக்கோரி திருவள்ளூர் மாவட்டத்தில் 14க்கு மேற்பட்ட விண்ணப்பம் பெறப்பட்டதாகவும், அவைகளை பரிசீலனை செய்ததில் 2004ம் ஆண்டு மற்றும் 2006ல் பணி புரிந்த போது காலமானவர்களின் வாரிசுதாரர்கள் மனு செய்துள்ளதாகவும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். எனவே கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்க வெளியிடப்பட்ட அரசாணையினை எந்த தேதியிலிருந்து நடைமுறைப்படுத்த வேண்டும் என்று குறிப்பிடாத நிலையில், பெறப்பட்ட மனுக்களின் மீது நடவடிக்கை எடுக்க இயலவில்லை எனவும்,

எனவே இது தொடர்பாக அரசாணையினை எந்த தேதியிலிருந்து நடைமுறைப்படுத்த வேண்டும் என தெளிவுரை வழங்குமாறு அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மேலும் சமூக நல ஆணையர் அரசுக்கு அனுப்பிய முன்மொழிவில் கருணை அடிப்படையிலான பணி நியமனங்கள் அரசு ஆணை வெளியிடப்பட்ட 25.10.2007 முதல் அமுலுக்கு வரும் என்றும் அந்த தேதிக்கு பின்னர் பணியில் இருக்கும் போது காலமான சத்துணவு பணியாளர்களின் வாாரிசுதாரர்களுக்கு மட்டுமே கருணை அடிப்படையிலான பணி நியமனம் வழங்க இயலும் என்று தெரிவித்துள்ளார்: இருப்பினும் 25.10.2007க்கு முன் தடையாணை அமலில் இருந்த காலத்தில் பணியிலிருக்கும்போது காலமான பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கும் கருணை அடிப்படையிலான பணி நியமனம் வழங்க வேண்டுமென சத்துணவு பணியாளர் சங்கங்கள் வலியுறுத்துவதால் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்டத்தில் பணியாற்றும் பணியாளர்கள் அவர்கள் பணியில் இருக்கும் காலத்தில் (Death while in service) இறக்க நேரிட்டால் அவர்களின் வாாரிசுதாராா்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கலாம் என அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

4. இப்பொருள் குறித்து அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அரசானை (நிலை) எண். 42, நாள் 12–3–2007ல் வெளியிடப்பட்டுள்ள அறிவுரைகளின் அடிப்படையில் சத்துணவு மற்றும் குழந்தைகள் மைய பணியாளர்களுக்கு கருணை அடிப்படையிலான பணி நியமனங்களை செய்ய தகுதியுடையவர்கள் குறித்து பின்வருமாறு தெளிவுரைகள் வழங்கி அரசு ஆணையிடுகிறது:-

- ❖ புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தில் சத்துணவு மையங்களில் பணிபுரிந்து மரணமடைந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு, கருணை அடிப்படையிலான பணி நியமனங்களுக்கு தடையாணை விதிக்கப்பட்ட 29–11–2001க்கு முன்னர் கருணை அடிப்படையிலான பணி நியமனங்கள் கோரி விண்ணப்பம் செய்து பதிவு செய்யப்பட்டவர்களும்,
- ❖ பணியாளர்கள் காலமான நாளிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்கு விண்ணப்பித்தவர்களும் தகுதியுடையவர்கள் ஆவர்.

- ❖ பணி நியமனங்களுக்கான தடையாணை நடைமுறையில் இருந்த 29–11–2001ல் இருந்து 21–02–2006 வரையிலான காலங்களில் கருணை அடிப்படையில் பணி வழங்கக்கோரி விண்ணப்பிக்க இயலாதவர்களுக்கு இவ்வாணை வெளியிடப்படும் நாளிலிருந்து 3 மாதங்கள் வரை விண்ணப்பிக்கும் காலம் நீட்டிக்கப்படுகிறது.

- ❖ குழந்தைகள் மையங்களில் பணியாற்றும் குழந்தைகள் மைய பணியாளர் மற்றும் குழந்தைகள் மைய உதவியாளர்களுக்கு அரசு ஆணையிட்ட 25.10.07க்கு முன்னர் கருணை அடிப்படையில் பணி வழங்கும் திட்டம் இல்லை. எனவே குழந்தைகள் மையங்களில் பணியாற்றி பணிக்காலத்தில் 25.10.07ஆம் நாள் மற்றும் அதற்கு பின்னர் காலமான குழந்தைகள் மைய பணியாளர் மற்றும் குழந்தைகள் மைய உதவியாளர்களின் பெண் வாரிசுதாரர்களுக்கு மட்டும் குழந்தை மையங்களில் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்க ஆணையிடப்படுகிறது. மேலும்

25.10.07ல் வெளியிடப்பட்ட 198 அரசாணையில் உள்ள பிற நிபந்தனைகளும் குழந்தை மைய பணியாளர்களுக்கு பொருந்தும் எனவும் ஆணையிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ந.சா. பழனியப்பன்
அரசு முதன்மைச்செயலாளர்

பெறுநர்

ஆணையர்,
சமூக நலத்துறை, சென்னை –5.
ஆணையர்,
ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்,
சென்னை 113.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
அனைத்து மாநகராட்சி ஆணையர்கள்,
மாநில கணக்காயர்,
சென்னை –18.
தலைமைத்துறை அரசு நிறுவன தணிக்கையர்,
சென்னை –2.
ஆணையாளர்,
கரூவூலம் மற்றும் கணக்குத்துறை,
சென்னை –15.
சம்பளக் கணக்கு அலுவலர்,
சென்னை ( கிழக்கு, வடக்கு, தெற்கு)
சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை (ச.ந. 7 பிரிவு),
சென்னை –9.
நகல்:–

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர்,
சென்னை –9.
மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த துறை, சென்னை –9.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை –9.
நிதித்துறை, (சமூக நலம் ) சென்னை –9.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்கள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்